RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-5 இதழ்- 221 ஆகஸ்டு.17 2026 திங்கள்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ.5

# பழைய ஃபார்மில் திமுக; கைது செய்ததற்கு தவெக அரசுக்கு நன்றி உதயநிதி ஸ்டாலின்

சென்னை: ஆக.17-

தேர்தலுக்குப் பிறகு சோர்ந்து போயிருந்த திமுகவை மீண்டும் பழைய ஃபார்மிற்கு கொண்டு வந்ததற்கு த.வெ.க. அரசுக்கு நன்றி தெரிவிப்பதாக எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுகவின் தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் திமுக சட்டத்துறை சார்பில் (ஆக.16) நடைபெற்ற வடக்கு மண்டல வழக்கறிஞர்கள் கலந்தாலோசனைக் கூட்டத்தில் திமுக இளைஞரணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போது பேசிய உதயநிதி ஸ்டாலின், திமுக வழக்கறிஞர் அணிக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன். திமுகவில் மட்டும் தான் ஒரு அணிக்கு சட்டத்துறை என பெயர் வைக்கப்பட்டுள்ளது. திமுக சட்டத்துறை தனித்துவம் வாய்ந்தது என புரிந்துக்கொள்ள முடிகிறது. திமுகவின் முதுகெலும்பு சட்டத்துறை.

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மறைவிற்குப் பிறகு அண்ணா நினைவிடத்திற்கு அருகில் நினைவிடம் அமைக்கப்பட வேண்டும் என ஆசைப்பட்டதை சட்டப் போராட்டம் நடத்தி நிறைவேற்றியது சட்டத்துறை அணி. யாரும் எதிர்பார்க்காத, தமிழ்நாடு எதிர்பார்க்காத தேர்தல் முடிவு வந்துள்ளது.

**அட்டவணைப் போட்டு கைது நடவடிக்கையில் த.வெ.க. அரசு**

தமிழ்நாடு மட்டுமின்றி, ஆட்சிக்கு வந்துள்ள சர்க்கஸ் கூட்டமே எதிர்பார்க்காத அளவிற்கு தேர்தல் முடிவுகள் வந்துள்ளன. சர்க்கஸ் கூட்டம் ஆட்சிக்கு வந்தவுடன் திமுக வழக்கறிஞர் அணியின் பணி மிக முக்கியமாகக் கருதப்படுகிறது. கடந்த 100 நாட்களில் திமுக வழக்கறிஞர் அணிதான் மிகவும் பிஸியாக இருக்கிறார்கள். தூங்கி எழுந்தால் யாரைக் கைது செய்யலாம் என அட்டவணை போட்டு த.வெ.க. அரசு கைது செய்து வருகிறது. தஞ்சாவூர் கூட்டத்தில் டம்மி முதலமைச்சர் என பேசினேன். அதை ஒப்புக்கொண்டார்கள்.

கேடுகெட்ட அரசு என விமர்சனம் செய்தேன். இதற்கெல்லாம் எந்த நடவடிக்கையும் இல்லை. காவிரியில் தண்ணீர் வர வேண்டும் என சொன்னேன். அதற்குக் கைது செய்கிறார்கள். என்னைக் கைது செய்ய காவல்துறையினர் வந்தபொழுது, என்.ஆர்.இளங்கோ மற்றும் வில்சன் உள்ளிட்டோர் வருவார்கள், அதுவரை அவர்களிடம் விசாரித்துக் கொண்டு இருங்கள் என திமுக தலைவர் அறிவுறுத்தினார்.

**மக்கள் வரிப்பணத்தில் ரோடு ஷோ**

நாம் ஒரு துறையைக் கேள்வி கேட்டால் வேறொரு துறை அமைச்சர் பதில் கூறுவார். அங்கு அமர்ந்திருக்கும் டம்மி முதலமைச்சருக்கும், யார் அமைச்சர், யார் சட்டமன்ற உறுப்பினர் என தெரியாது. சொல்லி அடிப்பது போல என்னுடைய கைது நடவடிக்கையை நீதிமன்றம் மூலம் ரத்து செய்ய வைத்ததும் வழக்கறிஞர்



அணிதான். தஞ்சாவூருக்கு ஜாலியாக ட்ரிப் செல்வது போல சென்றோம். வழக்கறிஞர் சரவணன், பி.கே.சேகர்பாபு, மா.சுப்ரமணியன் உள்ளிட்டோருடன் சென்றோம். மக்கள் வரிப்பணத்தில் ரோடு ஷோ. தேர்தலுக்குப் பிறகு சோர்ந்து போயிருந்த திமுகவை மீண்டும் பழைய ஃபார்மிற்கு கொண்டு வந்ததற்கு த.வெ.க. அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 100 நாட்களில் என்னை மட்டுமின்றி, முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன், திமுக சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன், ஜென்ஸி இளைஞர்களையும் கைது செய்துள்ளார்கள். தேர்தலுக்குப் பிறகு ஜென்ஸி இளைஞர்களை எழுப்பிவிட்டிருக்கிறோம். பவர் இல்லாதபோதும், எதிர்க்கட்சியாக இல்லாதபோதும் ஆளும் முதலமைச்சரை ஊழல் வழக்கில் சிறைக்கு அனுப்பிய அணி திமுக வழக்கறிஞர் அணி. சீட்டுக்கட்டில் ஒரு ஜோக்கர் இருக்கும். ஆனால் 52ம் ஜோக்கராக இருக்கிறது. வெகு விரைவில் அனைத்து அமைச்சர்களும் பெரிய வழக்கில் சிக்குவார்கள்.

**மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும்**

த.வெ.க. கும்பலை பெயில் வாங்கும் அரசாக மாற்ற வேண்டும். மெஜாரிட்டி இல்லாத அரசு தவெக. திமுக சட்டமன்ற உறுப்பினர் என்றால் வழக்கும், அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் என்றால் சோபா அனுப்பி ராஜினாமா செய்ய வைத்து வருகிறார்கள். த.வெ.க. ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு உள்ளது. கோயம்புத்தூர் கொலை சம்பவத்தில் திமுக நீதி பெற்றுத் தர வேண்டும் என உயிரிழந்த மாணவரின் தாயார் கூறியுள்ளார். ஜென்ஸி இளைஞர்கள் கொள்கையைப் பேச ஆரம்பித்திருக்கின்றார்கள். அதுதான் இன்றைய ஆட்சிக்கு பயத்தை உருவாக்கியுள்ளது. அவர்களை கைது செய்தால் அவர்களும், அவர்கள் குடும்பமும் பயந்து விடுவார்கள் என்று ஆட்சியாளர்கள் நினைக்கின்றார்கள்.

அவர்களுக்கு நாம் உறுதுணையாக நிற்க வேண்டும். ஜென்ஸி இளைஞர்களை ஒருங்கிணைத்து பணியாற்றுங்கள். ஆளுங்கட்சியினர் குற்றச்செயலில் ஈடுபட்டால், அவர்களை சும்மா விடக்கூடாது. நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுத் தரும்வரை நீங்கள் அந்த வழக்கை ஃபாலோ செய்ய வேண்டும். மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும்" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**திமுக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி பேட்டி**

செய்தியாளர்களைச் சந்தித்த திமுக சட்டத்துறை செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., "எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்யும் அளவில் காவல்துறை சர்வாதிகாரப் போக்கில் இருக்கிறது. கடந்த காலங்களில் திமுக எதிர்க்கட்சியாக இருந்தபோது இவ்வளவு சர்வாதிகாரப் போக்கு இல்லை. கைது மற்றும் எதேச்சதிகாரப் போக்கில் திமுகவின் தொண்டர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய சூழலில் இருக்கிறோம்.

திமுக வழக்கறிஞர்கள் முன்கூட்டியே அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். நீதிமன்ற நடவடிக்கைகள் குறித்து மாவட்டச் செயலாளர்களிடம் விளக்கம் அளிக்க வேண்டும். சமூக வலைதளத்தில் அருவருக்கத்தக்க வகையில் பேசி வருகிறார்கள். ஆளுங்கட்சிப் பரப்பும் தவறான பொய்ச் செய்திகளைப் பரப்பியவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் அணியை மறுசீரமைக்க இளைஞரணி செயலாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அதில் அதிகமாக இளைஞர்கள் பங்கெடுக்க வேண்டும் என்று இளைஞர் அணி செயலாளர் கூறியிருக்கின்றார். மேலும், வழக்கறிஞர் அணியைத் தீவிரமாகக் கண்காணித்தும் வருகிறார்" எனத் தெரிவித்தார்.

**திமுகவின் சட்டத்துறை அணி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

மேகதாது விவகாரத்தில் த.வெ.க. அரசின் அலட்சியப் போக்கைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றம்,

தஞ்சாவூர் ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகளுக்கு ஆதரவாகப் பேசிய திமுக இளைஞரணிச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து, த.வெ.க. அரசுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றம்,

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் மீது சமூக வலைதளங்களில், தொலைக்காட்சி விவாதங்களில் அருவருக்கத்தக்க வகையில் விமர்சிப்பவர்கள் மீது காவல்துறையில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காததைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றம்,

கோயம்புத்தூர் மாணவர் கொலை வழக்கில் த.வெ.க. அரசுக்கு கண்டனம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றம்,

தமிழ்நாட்டில் நாள்தோறும் குற்ற நிகழ்வுகள் அதிகரித்து வருகிறது. த.வெ.க. அரசுக்கு கடும் கண்டனம். விஜய் ஆட்சிக்கு வந்தவுடன் பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லை. 100 நாட்களில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது.

கொளத்தூர் தொகுதியில் இ.வி.எம். மெஷின் முறையாகப் பாதுகாக்கப்படாத நிலை நாடறியும். வெளிப்படைத்தன்மை இல்லாத இ.வி.எம். மெஷினுக்கு மாற்றாக வாக்குச்சீட்டு முறையைக் கொண்டுவர வலியுறுத்தி, இதனை சட்டப் போராட்டமாக இறுதி வரை திமுக வழக்கறிஞர் அணி மேற்கொள்ளும்.

## 'கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில் சிபிஐ விசாரணை தேவை' அன்புமணி

சென்னை, ஆக.17-

'கர்நாடக வனப்பகுதியில் 3 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து சிபிஐ விசாரணை வேண்டும். அவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும்' என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டம் காவிரி வனவிலங்கு சரணாலயத்தை ஒட்டிய வனப்பகுதியில் மான்வேட்டையாடியதாக பொய்யான குற்றச்சாட்டில் அப்பகுதியைச் சேர்ந்த 3 தமிழர்களை கர்நாடக வனத்துறை கொடூரமான முறையில் சுட்டுக்கொலை செய்திருப்பது கண்டிக்கத் தக்கது. கொல்லப்பட்ட மூவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்நாடக வனத்துறையினரால் கொலை செய்யப்பட்ட அந்தோணிசாமி, ஜான்ரோஸ் பீட்டர், குமார் ஆகிய மூவரும் முறையே அப்பகுதியில் உள்ள ஜகன்னாதத்தொட்டி, மரியமங்கலம், லாசர்தொட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர். அவர்கள் மூவரும் எந்த வகையான சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடாத நிலையில் அவர்களை சாக்யா பகுதி வன அலுவலகத்தைச் சேர்ந்த வனக்காவலர்கள் கொடூரமாக சுட்டுக் கொலை செய்துள்ளனர்.

இந்தக் கொலைகளை மறைப்பதற்காக அவர்கள் மூவரும் மான்களை வேட்டையாட வந்ததாகவும், அப்போது வனத்துறையினருடன் ஏற்பட்ட மோதலில் சுட்டுக்கொல்லப் பட்ட தாகவும் வனத்துறை கூறியுள்ளது. இது அப்பட்டமான பொய் என்று பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

கொல்லப்பட்ட மூவரும் தமிழ்நாட்டை பூர்வீகமாகக் கொண்டவர்கள் ஆவர். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் மேட்டூர் அணை கட்டுவதற்காக நிலங்கள் கையகப்படுத்தப்பட்ட போது, வீடுகள் மற்றும் உடைமைகளை இழந்து வாழ்வாதாரம் தேடி கர்நாடகம் மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டம் மரியமங்கலம் பகுதியில் குடியேறியவர்கள் ஆவர்.

மரியமங்கலம் காட்டுப்பகுதியில் மான் வேட்டையாடுவதற்கோ, இரு தரப்புக்கும் இடையே சண்டை நடந்ததற்கோ எந்த சான்றுகளும் இல்லை. கொல்லப்பட்டவர்கள் துப்பாக்கிகளை வைத்திருந் ததாக கூறப்படு வதிலும் உண்மையில்லை. தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தி வருவதால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கர்நாடக ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சாம்ராஜ்நகர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரும், மாவட்ட பொறுப்பு அமைச்சருமான புட்டரங்கா ஷெட்டி, மதச்சார்பற்ற ஜனதா தளத்தைச் சேர்ந்த ஹனூர் சட்டப்பேரவை உறுப்பினர் மஞ்சுநாத் ஆகியோர் அதிகாலை நேரத்தில் என்கவுன்டருக்கான தேவை ஏன் வந்தது? என்று வினா எழுப்பியுள்ளனர். மனித உரிமை ஆர்வலர்களும் வனத்துறையினரின் செயலைக் கண்டித்துள்ளனர்.

தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக முரண்பட்ட செய்திகள் வெளியாகி வருவதால் உண்மையைக் கண்டறிய மாஜிஸ்திரேட் விசாரணைக்கு ஆணையிடப்பட்டிருப்பதாக முதல்வர் டி.கே.சிவக்குமார் தெரிவித்துள்ளார். ஆனால், இந்த விசாரணையில் உண்மை வெளிவராது. இது குறித்து சிபிஐ விசாரணைக்கு ஆணையிடப்பட வேண்டும்.

தமிழர்கள் படுகொலைக்காக கர்நாடக அரசுக்கு தமிழக முதல்வர் விஜய் கண்டனம் தெரிவிப்பதுடன், பாதிக்கப்பட்ட மூவரின் குடும்பங்களுக்கும் கர்நாடக அரசிடமிருந்து தலா ரூ.1 கோடி இழப்பீட்டை வாங்கித் தர வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

## சென்னையில் சுதந்திர தின விழா: மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் கோலாகலம்

சென்னை, ஆக.17-

சென்னையில் உள்ள மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் சுதந்திர தின விழா நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

நாடு முழுவதும் 80 வது சுதந்திர தினம் நேற்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. சென்னையில் செயல்பட்டு வரும் மத்திய, மாநில அரசு அலுவலகங்களில் சுதந்திர தின விழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது.



சென்னை, பாரத சாரண சாரணியர் இயக்கத் தலைமையகத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செய்து, 37 சிறந்த சாரணர், திரி சாரணர், குருளையர், நீலப் பறவையினருக்கு விருதுகள் வழங்கினார். சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகத்தில் மேயர் பிரியா தேசிய கொடியை ஏற்றிவைத்து, தேசிய மாணவர் படை, சாரண சாரணியர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் தேசிய கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். கோயம்பேட்டில் உள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில், தேர்தல் ஆணையர் பா.ஜோதி நிர்மலா சாமி தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

சென்னை பல் கலைக் கழகத்தில் உயர்கல்வித் துறை செயலாளர் தீரஜ் குமார் தேசிய கொடியை ஏற்றி வைத்தார். அண்ணா சாலையில் உள்ள மின்வாரிய தலைமையகத்தில் மின்வாரிய தலைவர் அருண் ராய் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார்.

சென்னை எழிலகத்தில், வருவாய் நிர்வாக ஆணையர் நா.முருகானந்தம், தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில், நிலச் சீர்திருத்த ஆணையர் ஹர் சஹாய் மீனா, நகர்ப்புற நிலவரி ஆணையர் பா.மகேஸ்வரி, பேரிடர் மேலாண்மை ஆணையர் அ.சிவஞானம், சமூக பாதுகாப்புத் திட்ட இயக்குநர் ப.காயத்ரி கிருஷ்ணன், நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் தா.கிருஸ்துராஜ், மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மாநகர போக்குவரத்துக் கழக தலைமை அலுவலகத்தில், மேலாண் இயக்குநர் த.மோகன் தேசியக் கொடியை ஏற்றிவைத்து, மரியாதை செலுத்தினார். சென்னை குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் மேலாண்மை இயக்குநர் த.ஆனந்த், தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.

தெற்கு ரயில்வே சென்னை கோட்டம் சார்பில் அயனாவரத்தில் உள்ள ஆர்.பி.எஃப் மைதானத்தில் சுதந்திர தின விழா நடைபெற்றது. இதில் கோட்டம் மேலாளர் சைலேந்திர சிங் தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செய்தார். மேலும் ஐசிஎஃப் மைதானத்தில் நடைபெற்ற விழாவில் ஐசிஎஃப் பொது மேலாளர் மணீஷ் அகர்வால் தேசிய கொடியை ஏற்றிவைத்து ரயில்வே பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதை ஏற்றுக்கொண்டார். சென்னை சர்வதேச விமான நிலையத்தில் விமான நிலைய இயக்குநர் ராஜா கிஷோர் தேசிய கொடி ஏற்றி வைத்து மரியாதை செய்தார்.

நுங்கம்பாக்கத்தில் உள்ள வருமான வரித்துறை அலுவலகத்தில் தமிழகம் மற்றும் புதுவை வருமான வரி தலைமை ஆணையர் சுனில் பாஜ்பாய், ஜிஎஸ்டி பவனில் மத்திய கலால், சுங்கம் மற்றும் ஜிஎஸ்டி தலைமை ஆணையர் எஸ்.கே.விமல நாதன் ஆகியோர் தேசியக் கொடி ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர். சென்னை இந்தியன் ஆயில் பவனில், தெற்கு மண்டல நிர்வாக இயக்குநரும் தமிழக மாநிலத் தலைவருமான வி.சி.அசோகன் தேசியக் கொடியை ஏற்றினார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது





## ஊத்துக்கோட்டை பேரூராட்சி அலுவலகத்தில்80வது ஆண்டு சுதந்திர தின விழா

திருவள்ளூர், ஆக.17-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி அலுவலகத்தில் 80வது ஆண்டு சுதந்திர தினவிழா பேரூராட்சி அலுவலக வளாகத்தில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பேரூராட்சி செயல் அலுவலர் கோ. சதீஷ் தலைமை தாங்கி தேசியகொடியை ஏற்றி வைத்து காந்தியடிகளின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மறியைதை செலுத்தி தூய்மை பணியாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் இனிப்புகள் வழங்கி சுதந்திர தின நல் வாழ்த்துக்களை தெரிவித்தார்

இந்த நிகழ்ச்சியில் பேரூராட்சி இளநிலை உதவியாளர் ஜெய்சங்கர், போரூராட்சி தலைவர் கி.அப்துல்ரஷீத், துணை தலைவர் ரி.ஸி.குமரவேல், மற்றும் ஊத்துக்கோட்டை பேரூர் திமுக செயலாளர் ரி.அபிராமிகுமரவேல், கவுன்சிலர்கள் கல்பனாபார்த்தீபன், ஷி.வெங்கடேசன், கோகுல்கிருஷ்ணன், கோல்டுமணி, ஜீவா, சமீமாரஹீம், திருபூரசுந்தரி ஜெய்கனேஷ், சுபலதநரேஷ், பேருராட்சி ஊழியர்கள் குமார், சீனிவாசன், கோபிநாத், வெங்கடேசன்,சேட்டு, மற்றும் தூய்மை பணியாளர்கள் வெள்ளைச்சாமி, செல்வம், ராத,மோகன், தேவன், சுப்பம்மாள், குமுதா, ரஜினா கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் கிராமசபை கூட்டம்

மாதவரம், ஆக.17-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் தீர்த்தக்கிரியம்பட்டு ஊராட்சியில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் உல்லாசகுமார் தலைமையில் சமுதாய நலக் கூடத்தில் நடைபெற்றது.முன்னதாக தேசிய கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினர். பின்னர் அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினர். புழல் ஊராட்சி ஒன்றிய பற்றாளர் லதா முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் காசநோய், விழிப்புணர்வு ஹெச்வி நோய் விழிப்புணர்வு உள்ளிட்ட நோய்களுக்கான விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்க்கப்பட்டது.அதேபோல் ஜல்ஜீவன் திட்டம், குடிநீர், சாலை வசதிகள் உள்ளிட்டவைகள் மேம் படுத்துதல், தூய்மைப் பணியாளர் களிடம் குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் உள்ளிட்டவைகள் ஆலோசிக்கப்பட்டது.இதில் அரசு அதிகாரிகள், மகளிர் குழுவினர்கள் மற்றும் கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர்.





## செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் சார்பாக பம்மல் அலுவலகத்தில் 80வது சுதந்திர தின விழா

பம்மல், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் சார்பாக பம்மல் அலுவலகத்தில் 80வது சுதந்திர தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது . இதில் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி அவர்கள் தலைமையேற்று மூவர்ண கொடியை ஏற்றி வைத்தார்கள். இதில் மாநகராட்சி அரசு அதிகாரிகள் அலுவலர்கள் ஊழியர்கள் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். முடிவில் அனைவருக்கும் இனிப்புகளும் காலை சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து பள்ளிகள், பொதுநல சங்கங்கள் சார்பாக நடத்தப்பட்ட சுதந்திரதின விழாவில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத்தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி அவர்கள் கலந்து கொண்டு மூவர்ண கொடியை ஏற்றி சிறப்பித்தார்கள்.





■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டரங்கில் சுதந்திர தினத்தை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சி நடைபெற்றது





## 10 வயது சிறுவன் 17 கின்னஸ் ரெக்கார்ட் சாதனை படைத்து திருப்பத்தூரில் சிறந்த சாதனையாளர் என்ற விருதை பெற்றுள்ளார்

திருப்பத்தூர், ஆக.17-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூரில் உள்ள சகாய நகர் பகுதியைச் சார்ந்த 10 வயது சிறுவன் ஜனோ பிராங்கிளின்.றி இவர் சிலம்பாட்டம் வீரர், இவர் 17 கின்னஸ் ரெக்கார்ட் சாதனை படைத்த மாணவன், தனது 8 வயதிலேயே கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியரிடம் கலை இலை மணி விருது பெற்றவர்.

திருப்பத்தூர் மாவட்டத்தில் வரலாற்றிலேயே முதல்முறையாக கின்னஸ் சாதனை இடம் பிடித்து திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்தவர்.

அதனை தொடர்ந்து 80வது குடியரசு தின விழாவை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் சிறந்த சாதனையாளர் என்ற விருதை பெற்று மீண்டும் திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.



■ 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னை, மாதவரம் வட்டாட்சியர் அலுவலக வளாகம் முன்பு தேசிய கொடியை மாதவரம் வட்டாட்சியர் திருவேங்கடம் ஏற்றி வைத்து, கொடிக்கு மரியாதை செய்த பின்பு வருகை தந்த அனைவருக்கும் காலை உணவு இனிப்புகள் வழங்கப்பட்டது,





## தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல அலுவலகத்தில் 80வது சுதந்திர தின விழா

தாம்பரம், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல அலுவலகத்தில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசியக் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு 4வது மண்டல குழுத் தலைவரும், பகுதி கழக செயலாளருமான டி.காமராஜ் அவர்கள் தலைமை வகித்து, மூவர்ண தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.


இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர்கள் எஸ். சேகர், டி.ஆர். கோபி, பி. புகழேந்தி, ஸ்ரீ. சுரேஷ், எல். பெரியநாயகம், லிங்கேஸ்வரி பாபு, ஹேமாவதி சேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், நலச்சங்க நிர்வாகிகள், மாநகர மற்றும் பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டல உதவி ஆணையாளர் மி.ச.ப்ரீத்தி அவர்கள் முன்னிலை வகித்தார். 4வது மண்டல பொறியாளர் இந்திரா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் தேசிய ஒற்றுமை, நாட்டுப்பற்று மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை நினைவுகூர்ந்து மரியாதை செலுத்தப்பட்டது.





## சிவகங்கையில் தமிழ்நாடு அறிவியல் இயக்க செயற்குழுக் கூட்டம்!

சிவகங்கை, ஆக.17-

சிவகங்கை ஆர்.ஆர்.ஆர்.கே. நடுநிலைப் பள்ளியில், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் 2026-2027ஆம் ஆண்டுக்கான நான்காவது மாவட்ட செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். துணைத் தலைவர் பாபா அமீர் பாதுஷா முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் பிரபு கூட்டப் பொருள்களை முன்மொழிந்தார்.

அகில இந்திய அறிவியல் இயக்க சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் பரமேஸ்வரன் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பணி நிறைவுபெற்ற அறிவியல் இயக்க முன்னோடிகளான ஆசிரியர்கள் எட்வின், சாஸ்தா சுந்தரம் ஆகியோருக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

தேசிய குழந்தைகள் அறிவியல் மாவட்ட மற்றும் மண்டல மாநாடுகள், வினாடி வினா போட்டிகள், துளிர் திறனறிதல் தேர்வு, இயக்க அமைப்புப் பயிற்சி மற்றும் மூன்றாவது ஆண்டு அறிவொளி சங்கமம் நடத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. உறுப்பினர் சேர்க்கையை அதிகரித்தல், கிளைக் கூட்டங்கள் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளை நடத்துதல் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

செயற்குழு உறுப்பினர்கள் விக்டர், முனைவர் இளையராஜா, எட்வின், குருமூர்த்தி, மணவாளன், அனந்தகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். துணைத் தலைவர் ராஜுவின் அறிவியல் பாடலுடன் தொடங்கிய கூட்டம், ராஜசரவணனின் நன்றியுரையுடன் நிறைவடைந்தது.



■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில், நடைபெற்ற 80 வது சுதந்திர தின விழாவில், சிறப்பாக பணியாற்றிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கௌரிசங்கருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் (15.08.2026) பாராட்டு சான்றிதழை வழங்கினார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை யூனிவர்சல் பள்ளியில் 15/08/2026 அன்று இந்திய திருநாட்டின் 80 வது சுதந்திர தின விழா யுனிவர்சல் பள்ளியின் நிறுவனர் சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் முன்னாள் அமைச்சருமான ரி.சி.வீரமணி கலந்துகொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து தேசிய தலைவர்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார். பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பள்ளித் தாளாளர் தீபா சிவப்பிரகாசம் பள்ளி முதல்வர் கிரிநாத் பள்ளி ஆசிரியர் ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



### செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள்

## நெல் அரிசி வணிகர்கள் சங்கத்தில் சுதந்திரதின விழா, நலத்திட்ட உதவிகள் வழங்கல்

மாதவரம், ஆக.17-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சங்கம் சார்பில் 80வது சுதந்திர தின விழாவை முன்னிட்டு அரசு பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு பேன், சமையலுக்கு தேவையான பாத்திரங்கள், மேஜை, டேபிள், சேர் ஸ்டவ் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி செங்குன்றம் நெல் அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் நெல் அரிசி வணிகர்கள் சங்கத் தலைவர் கோபி தலைமையில் செங்குன்றம் சங்கத் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.சங்க துணைத்தலைவர் ஜெயபாலன், செயலாளர் லோகநாதன் இணைச் செயலாளர் நாகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.முன்னதாக தேசிய கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினர். சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு நெல் அரிசி வணிகர் சங்க சம்மேளனத் தலைவர் துளசிங்கம் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இதில் சங்க நிர்வாகிகள், அரிசி ஆலை உரிமையாளர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

# அஞ்சுகிராமம் ஊர் முன்னேற்ற சங்கத்தில் ஊர்க்காவல் கண்காணிப்பு திட்டம் சார்பில் போதை எதிர்ப்பு விழிப்புணர்வு

## போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்: ஏ.டி.எஸ்.பி. கலையரசன் பேச்சு

கன்னியாகுமரி, ஆக.17-

குமரி மாவட்டத்தில் மாவட்ட கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் பதவியேற்றதிலிருந்து குற்ற செயல்களை தடுப்பதற்கும் போதை இல்லா குமரி மற்றும் விபத்தில்லா குமரி எனும் இலக்கை அடைவதற்கு பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

அந்த வகையில் பொதுமக்கள் மற்றும் காவல்துறையினர் இடையே நல்லுறவை பேணும் விதமாக குமரியில் கிராமங்கள் தோறும் ஊர்காவல் கண்காணிப்பு திட்டம் ஒன்றை ஏற்படுத்தி அதனை திறம்பட செயல்படுத்தி வருகிறார்.

அதன் படி குமரி மாவட்ட கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் உத்தரவின் பேரில் அஞ்சுகிராமம் ஊர் முன்னேற்ற சங்கத்தில் ஊர்க்காவல் கண்காணிப்பு திட்டத்தின் மூலம் பொதுமக்களிடையே போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.



நிகழ்ச்சிக்கு அஞ்சுகிராமம் ஊர் முன்னேற்ற சங்க தலைவர் ஹிட்லர் தலைமை தாங்கினார்.

அஞ்சுகிராமம் வியாபாரிகள் சங்கத் தலைவர் தொழிலதிபர் எஸ்.வஸீம், அஞ்சுகிராமம் உதவி ஆய்வாளர் பிரிய ராஜ்குமார், கவுன்சிலர் ஜோஸ் திவாகர், அஞ்சுகிராமம் ஊர் முன்னேற்ற சங்க செயலாளர் எஸ் பி பாலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் சிறப்பு விருந்தினர்களாக ஏ.டி.எஸ்.பி. கலையரசன் மற்றும் அஞ்சுகிராமம் காவல் ஆய்வாளர் செல்வி ஆகியோர் கலந்து கொண்டு போதைப்பொருள் இல்லாத சமூகத்தை உருவாக்க காவல்துறையுடன் பொதுமக்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

தொடர்ந்து ஏடிஎஸ்பி கலையரசன் பேசுகையில், போதைப்பொருள் பழக்கம் தனிநபரின் உடல்நலத்தையும், மனநலத்தையும் மட்டுமின்றி குடும்பத்தின் அமைதியையும், சமூகத்தின் பாது காப்பையும் கடுமையாக பாதிக்கிறது. குறிப்பாக இளைஞர்கள் போதைப் பொருள் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுப்பதில் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு முக்கியப் பொறுப்பு உள்ளது என்றார்.

போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தல் தொடர்பான தகவல்கள் தெரியவந்தால், அவற்றை காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். தகவல் தெரிவிப்பவர்கள் அச்சப்படத் தேவை யில்லை. சமூகத்தின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அனைவரும் விழிப்புடன் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஊர்க்காவல் கண் காணிப்பு திட்டத்தின் முக்கிய நோக்கம் பொதுமக்கள் மற்றும் காவல்துறையினருக்கு இடையே நல்லுறவை ஏற்படுத்தி, உள்ளூர் அளவில் நடைபெறும் சட்டவிரோத செயல்களைத் தடுப்பதாகும். இதன் மூலம் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள், போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச் செயல்கள் குறித்து காவல்துறைக்கு உடனடியாக தகவல் கிடைக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களை போதைப்பொருள் பழக்கத்தில் இருந்து பாதுகாக்க தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்துவதுடன், அவர்களுடன் நட்பாகப் பழகி பிரச்சினைகளை பகிர்ந்து கொள்ளும் சூழலை உருவாக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

“போதை இல்லாத இளைஞர்கள்; பாது காப்பான குடும்பங்கள்; குற்றமற்ற சமூகம்” என்ற நோக்கத்துடன் காவல்துறை மேற்கொள்ளும் விழிப்புணர்வு நடவடிக்கை களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். போதைப்பொருளுக்கு எதிரான போராட்டம் காவல்துறையின் பணியாக மட்டுமே இல்லாமல், ஒவ்வொரு குடிமகனின் சமூகப் பொறுப்பாகவும் இருக்க வேண்டும் என அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் அஞ்சுகிராமம் ஊர் முன்னேற்ற சங்க செயற்குழு உறுப்பினர்கள் பால்ராஜ், ராமகிருஷ்ணன், ஜெயக்கொடி, அஞ்சை ஸ்போர்ட்ஸ் கிளப் தலைவர் அருள் நேசன், காவல்துறையினர் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு போதைப்பொருள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர்.



# கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரியில் சுதந்திர தின விழா

கிருஷ்ணகிரி, ஆக.17-

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் முதல்வர் மரு. க.சத்யபாமா தேசியக் கொடியேற்றி சுதந்திர தின விழாவை சிறப்பித்தார்.

தேசத் தலைவர் களையும், தியாகிகளையும் நினைவுகூர்ந்து, நாட்டிற்காக நாம் என்ன செய்தோம் என சிந்தித்து செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

சிறப்பாக பணியாற்றிய 17 பேருக்கு மாவட்ட ஆட்சியர் பாராட்டுச் சான்றிதழும், 120 பேருக்கு முதல்வர் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பட்டன.

மருத்துவ கண் காணிப்பாளர், துணை முதல்வர், மருத்துவ அலுவலர்கள், பேராசிரி யர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், கங்கலேரி ஊராட்சியில், 80 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, கிராம சபை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் (15.08.2026) அன்று நடைபெற்றது. உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் உமாமகேஸ்வரி, மகளிர் திட்ட அலுவலர் சுசீலா ராணி உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளனர்.



■ சென்னை, பெருநகர மாநகராட்சி மண்டலம் 3 அலுவலகத்தில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தேசிய கொடியை மண்டல குழு தலைவர் நந்தகோபால் ஏற்றி வைத்து மரியாதை செய்தனர், உடன் உதவி ஆணையர் ஆர்டின் லூசாரியோசெயற்பொறியாளர் சதீஷ்குமார் மற்றும் உதவி பொறியாளர்கள், அலுவலர்கள், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர். வருகை தந்த அனைவருக்கும் காலை உணவு இனிப்புகள் வழங்கப்பட்டது.



# கிராண்ட்லையன் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

மாதவரம், ஆக.17-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் கிராண்ட்லையன் ஊராட்சியில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் தேவகி தலைமையில் நடைபெற்றது. முன்னதாக ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். பற்றாளர் சுலோச்சனா, வட்டார வளர்ச்சி அலுவலர் விமலா, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் லதா ஆகியோர் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் காசநோய் மற்றும் ஹெச்வி நோய் உள்ளிட்ட நோய்களுக்கான விழிப்புணர்வு உறுதிமொழி வாசிக்கப்பட்டது. அதேபோல் ஜல்ஜீவன் திட்டம், குடிநீர், சாலை வசதிகள் உள்ளிட்டவைகள் மேம்படுத்துதல், தூய்மைப் பணியாளர்களிடம் குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் போன்றவை ஆலோசிக்கப் பட்டது. பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் அரசு அதிகாரிகள், மகளிர் குழுவினர்கள் உட்பட கிராமபொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

மாதவரம், ஆக.17-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் டில்லி தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்றது. முன்னதாக ஊராட்சி மன்ற அலுவலகத்தில் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினர்.மக்கள் நலப் பணியாளர் சிவக்குமார் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் காசநோய் மற்றும் ஹெச்வி நோய் உள்ளிட்ட நோய்களுக்கான விழிப்புணர்வு உறுதிமொழி வாசிக்கப்பட்டது.அதேபோல் ஜல்ஜீவன் திட்டம், குடிநீர், சாலை வசதிகள் உள்ளிட்டவைகள் மேம்படுத்துதல், தூய்மைப் பணியாளர்களிடம் குப்பைகளை தரம் பிரித்து வழங்குதல் போன்றவை ஆலோசிக்கப்பட்டது.பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் அரசு அதிகாரிகள், மகளிர் குழுவினர்கள் உட்பட கிராமபொதுமக்கள் கலந்துகொண்டனர்.



■ சென்னை, மாதவரம் சிஎம்டிஏ டிரக் டெர்மினல் வளாகத்தில், சிஎம்டிஏ டிரக் டெர்மினல் அல்டோடிஸ் - டினென்ஸ் அசோசியேசன், மோட்டார் வெளிச்சம் ஆல் இந்தியா மோட்டார் சர்வீஸ், சென்னை பெருநகர் லாரி ஓனர் டிரான்ஸ்போர்ட்டர் மற்றும் ஏஜென்ட் அசோசியேசன், சதன் ஸ்டேட் ஹார்பர் ஆபரேட்டர் , வெல்ஃபேர் அசோசியேசன் இணைந்து நடத்தும் 80வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. தேசிய கொடியை ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினர். மாபெரும் மருத்துவ முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகளான 4 பள்ளி மாணவ மாணவிகளுக்கு 5000 /. கல்வி உதவித்தொகை , 40 தூய்மை பணியாளர்களுக்கு 5 கிலோ அரிசி , 10 பேருக்கு வாகன வழிகாட்டி சீருடைகள் வழங்கப்பட்டது. சிஎம்டிஏ டிரக் டெர்மினல் லாரி சங்க லயன் தலைவர் ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் , சிறப்பு விருந்தினராக ராம் சுப்பிரமணி ஐ ஜி பி கலந்து கொண்டார். மேலும் சிறப்பு பேச்சாளர் முன்னாள் காவல்துறை உதவி ஆணையாளர் ராஜேந்திர ராஜா மற்றும் சங்க பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# தாம்பரம் ஜும்மா பள்ளிவாசலில் 80வது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது

தாம்பரம், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம் மேற்கு தாம்பரம் சண்முகம் சாலையில் அமைந்துள்ள ஜும்மா பள்ளிவாசலில், இந்தியாவின் 80வது சுதந்திர தின விழா உற்சாகமாகவும் தேசிய உணர்வை வெளிப்படுத்தும் வகையிலும் சிறப்பாக நடைபெற்றது.

பள்ளிவாசல் தலைவர் மற்றும் முன்னாள் மாமன்ற உறுப்பினரான ஜனாப் எம்.கே.நாகூர் கனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணைத் பொதுச்செயலாளர் மற்றும் தாம்பரம் 50வது வார்டு மாமன்ற உறுப்பினர் யாக்கூப் தேசியக் கொடியை ஏற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தார்.





இதனைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு, நாட்டின் சுதந்திரத்திற்காக தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த தியாகிகளுக்கு மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் உரையாற்றிய யாக்கூப், இந்திய சுதந்திரம் பல தலைவர்களின் தியாகம் மற்றும் போராட்டங்களின் விளைவு என்பதை நினைவூட்டியதுடன், அந்த தியாகங்களை இன்றைய தலைமுறை யினர் மறக்கக் கூடாது என்று வலியுறுத்தினார்.

விழாவில் கலந்து கொண்ட சமூக, மத மற்றும் அரசியல் அமைப்புகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள், சுதந்திர தினத்தின் முக்கியத்துவம், நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு மற்றும் தேசிய ஒற்றுமையின் அவசியம் குறித்து உரையாற்றினர். மேலும், மத நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்ச்சியில் ஏராளமான பொதுமக்கள், இளைஞர்கள் மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் பங்கேற்றனர். தேசபக்தி முழக்கங்களால் விழா களைகட்டிய நிலையில், நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது.

இந்தியாவின் 80வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தாம்பரம் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்ற இந்த விழா, தேசிய ஒற்றுமை மற்றும் மத நல்லிணக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது.



■ திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை ஒன்றியம், பாச்சல் கிராமத்தில் அமைந்துள்ள ஆயுதபடை காவலர் பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற 80 வது சுதந்திர தினவிழாவில் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், தேசிய கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார். உடன் திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் Dr.N.திருப்பதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அஃஷய் அனில் வாகரே மாவட்ட வருவாய் அலுவலர் இரா.பாலசுப்ரமணியன் மற்றும் பலர் உள்ளனர்.



# தாம்பரம் அடுத்த அகரம் தென் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

அகரம்தென், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் தாம்பரம் அடுத்த அகரம் தென் முதல் நிலை ஊராட்சியில் கிராம சபை கூட்டம் (ஆகஸ்ட் :15) ஊராட்சி மன்ற தலைவர்., ஜெகதீஸ்வரன் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலக வாளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலர்., ஏ. பிரபாகரன் நிறைவேற்றப்பட்ட பணிகளின் பட்டியலின் விபரங்களை அனைவரின் முன்பு படித்துக் காட்டினார். தொடர்ந்து பொதுமக்கள் இதுவரை நடைபெற்று நிறைவடைந்த பணிகளுக்கு நன்றி தெரிவித்து ஊராட்சி மன்ற தலைவரை பாராட்டினார்கள். தொடர்ந்து கிராம பொதுமக்கள் தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக அளித்து தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. தொடர்ந்து அகரம் தென் ஊராட்சி மேலும் மேலும் வளர்ச்சி அடைய பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு தருமாறு ஊராட்சி மன்ற தலைவர் கேட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.







# பாபா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் சுதந்திர தின விழா கோலாகலம்!

சிவகங்கை, ஆக.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் 80 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு பாபா மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பள்ளி நிர்வாகி R.மீனாட்சி தேசியக்கொடியை ஏற்றினார். தொடர்ந்து மாணவர்களின் அணிவகுப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தேசத் தலைவர்கள் போல் வேடமணிந்த மாணவர்கள் உரை, நடனம், பாடல் மற்றும் கவிதை மூலம் தேசப்பற்றை வெளிப்படுத்தினர். பள்ளித் தாளாளர் R.கபிலன், மகாத்மா காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

விழாவில் பள்ளித் தாளாளர் கபிலன், பள்ளி நிர்வாகி மீனாட்சி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன. விழா ஏற்பாடுகளை பள்ளி முதல்வர் சாரதா மற்றும் ஆசிரியர்கள் செய்திருந்தனர்.






# மானாமதுரையில் ‘பத்து நிமிடம் பேசிப்பார்’ கவிதை நூல் வெளியீட்டு விழா!

மானாமதுரை, ஆக.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அங்காள பரமேஸ்வரி திருமண மகாலில், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் ஓய்வுபெற்ற துணை ஆட்சியர் பவேரா மணிவேலன் எழுதிய ‘பத்து நிமிடம் பேசிப்பார்’ கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

கிளைத் தலைவர் தேவதாஸ் தலைமை வகித்தார். கிளைச் செயலாளர் ரசீந்திரகுமார் வரவேற்றார். பட்டிமன்றப் பேச்சாளர் திருமாவளவன் நூலை வெளியிட, ஆம்ஸ்ட்ராங் பன்னாட்டு நிறுவன உதவி மேலாளர் கார்த்திக் பெற்றுக்கொண்டார்.

எழுத்தாளர் ஜீவசிந்தன், ஜாகீர் உசேன் கல்லூரி முதல்வர் ஜபருல்லாகான், சார்பு ஆய்வாளர் தேவமாறன், தேன்மொழி அப்பாவு, ரத்தினவள்ளி முத்துச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பவேரா மணிவேலன் ஏற்புரையாற்றினார். கிளைப் பொருளாளர் பாரதி நன்றி கூறினார். விழாவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



# புள்ளிலைன் ஊராட்சியில் சுதந்திர தின விழா, கிராம சபை கூட்டம்

மாதவரம், ஆக.17-

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் புள்ளிலைன் ஊராட்சியில் 80வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் பொன்னையன் தலைமையில் நடைபெற்றது. புழல் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன், பற்றாளர் சத்தியவாணி, கிராம நிர்வாக அலுவலர் பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தார். முன்னதாக தேசிய கொடியினை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி அனைவருக்கும் இனிப்புகளை வழங்கினர். இக்கூட்டத்தில் காசநோய் மற்றும் ஹெச்ஐவி நோய் குறித்து விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார்.இதில் வேளாண்மை அலுவலர் முகம்மது, நியாய விலைக் கடை அலுவலர் வினோத்குமார், அங்கன்வாடி பணியாளர் சிவகாமி மற்றும் மகளிர் குழுவினர்கள் , ஊராட்சி பணியாளர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் கலந்துகொண்டனர்.





■ திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை அரசினர் ஆண்கள் மேல்நிலை பள்ளியில் 80வது ஆண்டு சுதந்திர தினவிழா தலைமை ஆசிரியர் வி.சுரேஷ் தலைமையில் இயற்பியல் ஆசிரியர் பாண்டியன் பெற்றோர் ஆசீரியர் சங்க தலைவர் மு.தமிழ்ச்செல்வன் லையன்ஸ் கிளப் வட்டார தலைவர் நடராஜன் முன்னிலையில்நடைபெற்றது இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் வி.சுரேஷ் தேசிய கொடியேற்றி இலக்கிய மன்ற போட்டி மற்றும் விளையாட்டு போட்டி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் ழிசிசி மாணவர்களுக்கும் மெடல்,ஊக்கதொகை, பரிசுகள், இனிப்பு வழங்கி சிறப்பித்தனர் பள்ளி மாணவர்கள் ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோர்கள் ஏரளமானோர் கலந்து கொண்டனர்



# இடைக்காட்டூர் ஆ.மு.சண்முகநாதன் மறைவு: தி.மு.க.,வினர் அஞ்சலி!

மானாமதுரை, ஆக.17-

சிவகங்கை மாவட்ட திமுக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையின் மாவட்ட அமைப்பாளரும், இடைக்காட்டூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவருமான ஆ.மு.சண்முகநாதன் கடந்த 15ஆம் தேதி இயற்கை எய்தினார். அவரது இறுதி ஊர்வலம் சொந்த கிராமமான இடைக்காட்டூரில் நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர்களும் திமுக நிர்வாகிகளுமான கே.ஆர்.பெரியகருப்பன், முகவை தென்னவன் ஆகியோர் நேரில் சென்று மாலை அணிவித்து இறுதி மரியாதை செலுத்தினர்.

மறைந்த சண்முகநாதன், சிறுவயது முதலே முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மீதும், முன்னாள் அமைச்சர் பசும்பொன் தா.கிருட்டிணன் மீதும் மிகுந்த பற்று கொண்டிருந்தார். கலைத்துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், இடைக்காட்டூர் திமுக கிளைச் செயலாளர், ஒருங்கிணைந்த மானாமதுரை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தார். இடைக்காட்டூர் ஊராட்சி மன்றத் தலைவராகவும் மக்கள் பணியாற்றினார்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாரியப்பன் கென்னடி, மாவட்ட துணைச் செயலாளர் சேங்கைமாறன், கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கப் பேரவைத் தலைவர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், நகரம் பொன்னுச்சாமி, ஒன்றியச் செயலாளர்கள் துரை ராஜாமணி, வழக்கறிஞர் ம.அண்ணாதுரை, திருப்புத்தூர் பேரூர்க் கழக கார்த்திகேயன், கே.எஸ்.நாராயணன், மாவட்டத் தலைவர் தொழிலதிபர் திருநாவுக்கரசு, மாவட்ட துணை அமைப்பாளர்கள் அபி என்ற ஆபிரகாம், சிங்கம்புணரி செல்வக்குமார், நாகவயல் ராஜேந்திரன், தமராக்கி ரவி, ஜிம் மூர்த்தி, திருமலை குமணன், துணைச் சேர்மன்கள் வழக்கறிஞர் கார்கண்ணன், பாலசுந்தரம், மானாமதுரை ஒன்றிய முன்னாள் சேர்மன் லதா அண்ணாதுரை ,அறிவுக்கரசு, தேளி கோபால், கவுன்சிலர் துபாய் காந்தி, வழக்கறிஞர் பாஸ்கர், பாலகிருஷ்ணன், சுப.ஜெயக்குமார், இளைஞரணி கோபிக்கண்ணன், சீனிக்குட்டி உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்துகொண்டு இறுதி மரியாதை செலுத்தினர்.





# வேங்கடமங்கலம் ஊராட்சியில் தனுஷ் நண்பர்கள் நற்பணி மன்றம் திறப்பு

வேங்கடமங்கலம், ஆக.17-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங் குளத்தூர் ஒன்றியம், வேங்கட மங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் தனுஷ் நண்பர்கள் நற்பணி மன்றம் (ஆகஸ்ட் : 15) அன்று y. நூர் முகமது , மாவட்டச் செயலாளர் தலைமையில் B. வினோத் மாவட்டத் தலைவர்., முன்னிலையில் R. சுரேஷ் மன்றத் தலைவர்.,

நிகழ்ச்சி ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டது. வி. சுப்ரமணியன் சிவா அனைத்திந்திய தலைவர் மற்றும் B.ராஜா அனைத்திந்திய செயலாளர் வழிகாட்டுதலின்படி, தனுஷ் நண்பர்கள் நற்பணி மன்றம் வேங்கடமங்கலம் ஊராட்சியில் திறந்து வைக்கப்பட்டு குழந்தைகளுக்கு நோட்டு, புத்தகங்கள் ,பேனா இனிப்புகள் வழங்கி திறப்பு விழா கொண்டாடப்பட்டது. திறப்பு விழாவில் மாவட்ட நிர்வாகிகள் : மாவட்ட பொருளாளர் ,S. தினேஷ், மாவட்டத் துணைச் செயலாளர், எஸ் ராகவன், மாவட்ட இ அ. தலைவர், எம். அஜய், மாவட்ட இ. அ.து செயலாளர், எம். பிலிப்ஸ், மாவட்ட த. தொ. நு. அ. செயலாளர், என் . நரேஷ், கா. ஒன்றிய தலைமை, வி.பத்தா., மன்ற நிர்வாகிகள் : மன்ற துணைத்தலைவர், நிதின் நித்திஷ், மன்ற செயலாளர், லீனஸ் ( எ) லீ, மன்ற பொருளாளர், சந்துரு, மன்ற துணைப் பொருளாளர், எம்.சரவணன், மன்ற துணைச் செயலாளர், பி. சிரஞ்சீவி மன்ற உறுப்பினர்கள் : லியோன், விக்கி ,விமல், நவீன் ,மனோஜ், விக்னேஷ், மார்கஸ், ஜேம்ஸ், பிரதீப், சதீஷ்குமார் உடன் இருந்தனர்.



# கல்லலில் மாணவ மாணவியர் குழு சார்பில் சுதந்திர தின விழா!

கல்லல், ஆக.17-

சிவகங்கை மாவட்டம் கல்லலில், மாணவ மாணவியர் குழு சார்பில் 80வது சுதந்திர தின விழா சிறப்பாக நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலின்படி, காவல்துறையின் பங்களிப்புடன் மாநிலம் முழுவதும் மாணவ மாணவியர் குழு செயல்பட்டு வருகிறது. மாணவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் செய்தித்தாள்கள் மற்றும் புத்தகங்களைப் படிப்பதுடன், விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தித் திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும்.


சிவகங்கை மாவட்டத்தில் காவல் துறையின் கண்காணிப்புடன் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் இக்குழுவிற்கான மையங்கள் செயல்பட்டு வருகின்றன. கல்லல் மையத்தில் பள்ளி மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் உறுப்பினர்களாக உள்ளனர். முக்கிய தினங்களையொட்டி இவர்களுக்கு விளையாட்டு, கலை மற்றும் இலக்கியப் போட்டிகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

80வது சுதந்திர தினத்தையொட்டி இக்குழு சார்பில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. தொடர்ந்து கல்லல் முருகப்பா மேல்நிலைப் பள்ளியில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பள்ளித் தலைமை ஆசிரியர் அழகப்பன் விழாவிற்குத் தலைமை வகித்து, சுதந்திர தின உரையாற்றினார். கல்லல் காவல் நிலையத் துணை ஆய்வாளர் ராஜசேகர் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். ஆசிரியை கற்பகவல்லி சிறப்புரையாற்றினார்.

மாணவிகள் காளீஸ்வரி, திரிஷா ஆகியோர் கவிதை வாசித்தனர். பிரகதீஷ்குமார் ஆங்கிலத்தில் உரையாற்றினார். பிரத்திந்ரா தேவி, கணேஷினி, சவிதா மற்றும் பாரத் விஜயன் ஆகியோர் தேசப்பற்று நடனம் ஆடினர். இக்குழுவைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்கள் கண்ணதாசன், சேவியர், எழிலரசன், கார்த்திகேயன், கல்லல் மாணவ மாணவியர் குழு முதன்மை ஒருங்கிணைப்பாளர் பிரபு மற்றும் ஒருங்கிணைப்பாளர் மருதநாயகம் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# சுதந்திர தின விழாவில் மொழிப்போர் தியாகியின் மனைவிக்கு கவுரவம்!



சிவகங்கை, ஆக.17-

சிவகங்கை மாவட்டம் அரசனி முத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பத்தினாதன், இளம் வயதிலேயே மொழிப்போரில் பங்கேற்றவர். அவரது சேவையைப் பாராட்டும் வகையில், ஆண்டுதோறும் சுதந்திர தின விழாவில் அவரது வாரிசுதாரர்கள் மாவட்ட நிர்வாகத்தால் கவுரவிக்கப்படுகின்றனர்.

அதன்படி, சிவகங்கையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், பத்தினாதனின் மனைவியும் சிவகங்கை மாவட்ட திமுக மகளிரணி துணைத் தலைவருமான மார்கரேட் கமலா பத்தினாதனுக்கு மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் கைத்தறி ஆடை அணிவித்து கவுரவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161